கூட்ட எண் 07
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 31.08.2018.

**2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31.08.2018 ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையர் பொறுப்பு அவர்களின் ஜீலை 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியில் 2018 - 2019ம் ஆண்டிற்கு பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்ய 31.07.18 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | சுண்ணாம்பு நீர் கிலோ 1க்கு | பிளிச்சிங் பவுடர் கிலோ 1க்கு |
|---|---|---|
| 1. விஷால் ஏஜென்சிஸ் அம்பத்தூர் | ரூ. 11.25 | ரூ. 52.75 |
| 2. ஜி.கே. ஏஜென்சிஸ் ஆவடி, சென்னை | ரூ. 9.50 | ரூ. 49.50 |

அலுவலக குறிப்பு :- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜி.கே. ஏஜென்சிஸ் ஆவடி, சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1258 / எச்1/18

4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண் 73 மற்றும் 76-இல் 01.04.2018 முதல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்கள், பள்ளிகள், கோயில்கள் மற்றும் காலியிடங்கள் விடுதலின்றி இடம் பெற்றிருக்கவும் நகராட்சி பொறியாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர் ஆகியோர் கொண்ட குழு அமைத்து சரியான தகவல்களை பெற்று மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யவும், குடியிருப்புகளுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100% மிகாமலும் 01.04.2018 முதல் புதிய சொத்துவரி உயர்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- அரசு ஆணை எண் 73 மற்றும் 76-இல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய மன்றம் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 1756/அ1/2018)

5. ஆரணி நகராட்சியில் காந்தி மார்செட் ரோடில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கும், சத்தியமூர்த்தி சாலையில் உள்ள காந்தி சிலைக்கும் வருகின்ற ஆகஸ்டு 15 சுதந்திர தினத்தை முன்னிட்டு அச்சிலைகளுக்கு பெயிண்ட் செய்தும் பாதுகாப்பாக உள்ள இரும்பு ஜன்னல்களை பழுது சரி செய்து தரும் பணிக்கு ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 20000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

.6. ஆரணி நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (TURIF) 2018–2019ன் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள், மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்கவும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண் **12981/2018/E3** நாள் **21.08.2018**ல் மதிப்பீடு ரூ.**100.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பின்வரும் நிதியின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ. **100.00** (TURIF – 38.00 + SFC / CFC Grant 30.00 Incentive Grant 22.00 + ULB Contribution 10.00 செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம், மேலும், தனிஅலவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1113/2018/இ1)

7.. ஆரணி நகராட்சியில் அமைக்கப்பட்டு இயங்கிவரும் நவீன எரிவாயு தகனமேடையின் பணி பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. நகரின் பொது மக்களின் தேவையை எதிர்கொண்டு தகன மேடையின் பழுதடைந்த பொருட்களை சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.(கோப்பு எண் 761/2018/இ1)

8. ஆரணி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பில் பயன்படுத்தப்படும் 40 வாட்ஸ் குழல் விளக்குகள், 70 வாட்ஸ் சோடியம் விளக்குகள், 150 வாட்ஸ் சோடியம் விளக்குகள், சோக், ஸ்டார்டர்கள் மற்றும் குழல் விளக்கு பிட்டிங்ஸ், தானியங்கி சுட்ச் ஆகிய மின்உபகரணங்கள் பழுது ஏற்பட்டு மீண்டும் உபயோகபடுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, தேவையற்ற தெருவிளக்கு மின்உபகரணங்களை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 795/2018/இ1)

9. ஆரணி நகராட்சியில் 33 வார்டுகளுக்குட்பட்ட பகுதியில் 362 சிறுமின்விசை பம்புகளும் 74 ஆழ்துளை குழாய் கிணற்றுடன் கூடிய அடிப்பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இதில் பெரும்பாலான சிறுமின்விசை பம்புகள் பொது மக்களின் தொடர் பயன்பாட்டில் உள்ளதால், தற்போது அவ்வப்போது ஆங்காங்கே பொது மக்களிடமிருந்து சிறுமின்விசை பம்புகள் பழுதுற்றுள்ளதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதில் 20 க்கும் மேற்பட்ட சிறுமின்விசை பம்புகள் பழுதுற்று இயங்காமல் உள்ளது. மேலும், தொடர்ந்து வரும் புகார்களின் அடிப்படையிலும், தற்போது தச்சூர் மற்றும் கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் போதிய நீர் ஆதாரம் இல்லாத காரணத்தினால் பொது மக்களின் முழு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளதால், குடிநீர் அல்லாத பிற தேவைக்கு பொது மக்கள் சிறுமின்விசை பம்பினையே நம்பியுள்ளதாலும், பொது மக்களின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு பொது மக்களிடமிருந்து வரும் புகார்களின் அடிப்படையில் உடனுக்குடன் சீர் செய்த தரும் பொருட்டு இரண்டு மாத காலத்திற்கு பழுது பார்ப்பு பராமரிப்பிற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதியளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கூறிய பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

10. ஆரணி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் சுகாதார முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, இந் நகரில் பராமரிக்கப்பட்டு வரும் 8 நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் நீரேற்றும் செய்யப்படும் குடிநீரில் குளோரின் கலந்து விநியோகம் செய்யும் பொருட்டு நிறுவப்பட்டுள்ள திரவ குளோரினேசன் கலக்கும் (Chlorine Dassing Pump) இயந்திரத்திற்கு பயன்படுத்தப்படும் திரவ குளோரினேசன் இருப்பு குறைவாக உள்ளதால் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும் தினசரி விநியோக அளவான 54 இலட்சம் லிட்டர் குடிநீரில் குளோரின் கலந்து விநியோகம் செய்ய ஏதுவாக தினசரி தேவையின் அடிப்படையில் (நாளொன்றிக்கு 216 லிட்டர்) மாதம் 6480 லிட்டர் தேவைப்படுகிறது. வருகின்ற 4மாத காலத்திற்குதேவையான அளவிற்கு வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 3.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதியளிக்கலாம். மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கூறிய பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

11. 7வது உயர்மட்ட குழுக் கூட்ட நடவடிக்கைகள் நாள் 13.08.2018-ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களின் கடிதம் ந.க.எண் 22866/2018/P3 நாள் 23.08.2018ல் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள **ஆரணி நகராட்சியில் குப்பைகள் சேகரம் செய்வதற்கான மின்கலனால் இயங்கக்கூடிய (Battary Oparater Vehicle) வண்டிகள் 15 எண்ணிக்கை மதிப்பீடு ரூ. 27.00 இலட்சத்தில்** பின்வரும் நிதிகளின் அடிப்படையில் வாங்கிக் கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
**GOI Share 35% ரூ. 9,45,000/- State Share 55% ரூ.14,85,000/- ULB Share 10% ரூ.2,70,000 /- Estimate RS. 27,00.000**
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி பணியினை மேற்கொள்வதற்கான தொடர் நடவடிக்கைக்கும், மேலும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

12. இந் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில் பயன்பட்டில் இருந்து வரும் வாகனம் எண் TN25BY7803 வருடாந்திர இன்சூரன்ஸ் 26.09.2018அன்றுடன் நிறைவடைகிறது. எனவே, 27.09.2018 முதல் 26.09.2019 வரை மேலும், ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொளள ஆகும் செலவினம் தொகை ரூ. 37866/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும் மேற்படி இன்சூரன்ஸ் யுனைடெட் இந்தியா கம்பெனி லிட் நிறுவனத்தில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 364/2016/இ1)

13. ஆரணி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் திரு. எம். துரைக்கண்ணு த/பெ முனுசாமி துப்புரவு பணியாளர் என்பவர் வேலை வாங்கி தருவதாக மோசடி செய்து ஆரணி நகர காவல் நிலையத்தில் குற்ற எண் 96 / 2007 420 இதச நாள் 25.05.2007இல் 11 நபர்களுடன் திரு. துரைக்கண்ணு, துப்புரவு பணியாளர் என்பவர் சேர்ந்து 48மணி நேரம் சிறையில் காவல் வைக்கப்பட்டுள்ளதால், ஆணையர் ஆரணி நகராட்சி அவர்களின் செயல்முறைகள்டிப, தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். இதனை தொடர்ந்து உயர்நீதி மன்றம் சென்னையில் வழக்கு எண் 30581/2007 to 30589 வரை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் 30079/2007 MP 01/2007 நாள் 17.04.2007ன்படி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் 4வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில் 15.10.2007 அன்று மீண்டும் பணியில் சேர 11 நபர்களுக்கும் உத்தரவிடப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களின் செயல்முறையில் குற்றவியல் வழக்கில் ஈடுபட்டுள்ள நபர்களை பணியிலிருந்து ஓய்வு பெறுவதை நிறத்தி வைத்து தற்காலிக பணி நீக்கம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு. துரைக்கண்ணு த/பெ முனுசாமி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 13932 / 2018 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. பால்ராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே, மேற்காணும் வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பாக வாதாட பத்திவாரி அறிக்கை தயார் செய்ய கட்டணம் ரூ. 15000/- வழங்க மன்றம் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 3115/2007/எச்1)

14. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வெங்கட்ராமன் பூங்காவில் பொது மக்கள் மற்றும் சிறுவர் சிறுமியர் பொழுது போக்கிற்காக வைக்கப்பட்டுள்ள ஊஞ்சல் மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. மேலும், பூங்காவின் நடைபாதையில் சிமெண்ட் தளம் பழுதாகியுள்ளதால், நடைபயிற்சி மேற்கொள்ள பொது மக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே, மேற்கூறிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

15. இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு புதியதாக வாங்கப்பட்ட வாகனம் TN25BY7803 கடந்த ஒரு வருடகாலம் ஆகிவிட்டதால், அதனை கொள்முதல் செய்த நிறுவனத்தில் சர்வீஸ் செய்யவேண்டி விடப்பட்டது. அந்நிறுவனம் வாகனத்தை சர்வீஸ் செய்து அதற்கான தொகை ரூ. 4878/- வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வாகனம் சர்வீஸ் செய்ததையும், நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

16. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **09.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம்<br><br>திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான காந்தி ரோடில் இடிந்து விழும் அபாய நிலையில் உள்ள காய்கறி அங்காடி கடைகள் இடித்து அப்புறப்படுத்தி சமன் செய்து தரும் பணிகள் | **7.50** | S.உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.27 % குறைவு<br>0.57 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேற்படி பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

17. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **24.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் பிள்ளையார் கோயில் அருகில் சிறுபாலம் அமைத்தல் | 0.60 | எ.அசோக்குமார்<br>இ.இளங்கோவன் | 0.17 % குறைவு<br>0.62 % அதிகம் |
| 2 | வார்டு எண் 31 அரசு மருத்துவமனை மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள முட்புதர்களை அகற்றி சமன் செய்யும் பணி | 0.50 | S.உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.13 % குறைவு<br>2.56 % அதிகம் |
| 3 | **குடிநீர் நிதி 2018 - 2019**<br>தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பாலத்தின் மீது வரும் நீரேற்று குழாய் "8" DI பைப் அமைப்பு மாற்றி பழுது பார்க்கும் பணி செய்தல் | 0.50 | S.உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.24 % குறைவு<br>1.01 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | குடிநீர் விநியோத்திற்கு தேவையான திரவ குளோரினேசன் விநியோகம செய்தல் | 3.70 | M/s நித்யன் எண்டர்பிரைசஸ் வேலூர் -01<br>M/s குமரன் எண்டர்பிரைசஸ் வேலூர் - 09 | 0.74 % குறைவு<br>2.94 % அதிகம் |
| 5 | சிறுமின்விசை பம்புகள் பழுது பார்த்தல் | 1.00 | S.உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0.55 % குறைவு<br>1.82 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

18. ஆரணி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதி-2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **17.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்**<br>**வருவாய் நிதி** | **மதிப்பீடு ரு. லட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் விவரம்**<br>**திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 23 இளங்கோ தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | எ.அசோக்குமார்<br>இ.இளங்கோவன் | 0.12 % குறைவு<br>0.46 % அதிகம் |
| 2 | வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.50 | இ.இளங்கோவன்<br>ஆர். கந்தன் | 0.14 % குறைவு<br>0.57 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1284/இ1/2018)

19. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி சீராய்வு நடைபெறுவதால், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண் 73 மற்றும் 76இல் புதிய சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிட்டதற்கிணங்க, அதற்கான படிவங்கள் நேப்கோ பிரிண்டர்ஸில் அச்சடித்துக் கொள்ளவும், அதற்கான பட்டியல் தொகை மற்றும் பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்வதற்கு தோராய செலவினம் ரூ.3,00,000/-க்கு (மூன்று லட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். மேலும்,பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1756/அ1/2018)

20. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 23 தச்சூர் சாலையில் உள்ள நடுநிலைப் பள்ளி கட்டிடம் தரைதளம், மேற்கூறையும் பழுதடைந்து உள்ளது. அப்பள்ளி மாணவ மாணவியர், மற்றும் ஆசிரியர் ஆகியோர் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளிக் கட்டிடத்தின் தரைதளம் மற்றும் மேற்கூறை பழுதினை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

21. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பேத்கார் நகர் பகுதியில் (சத்திய மூர்த்தி சாலையிலிருந்து அம்பேத்கார் நகர் செல்லும் முக்கியம்மன் கோயில் செல்லும் சாலையில்) உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொது மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, அச்சிறுபாலத்தை சரி செய்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

22. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண் 17018/2018/குவ1, நாள் 23.08.2018இல் தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் 2018 - 2019ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 34 அறிவிப்பு எண் 14இல் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) அமைக்க உரிய இடம் தேர்வு செய்து, தேர்வு செய்யப்படும் இடங்கள் அம்மா உணவகங்கள், அருகிலோ அரசு மருத்துவமனை , பேருந்து நிலையம், கடைவீதிகள் அருகிலோ, வீட்டுப் பகுதிகளை பொறுத்தவரை சிறுமின்விசை பம்புகள் உள்ள இடமோ, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி உள்ள இடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளியிடமாகவோ இருக்குமாறு தேர்வு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்த தனியார் நிறுவனங்களுடன் / தொழிற் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility Fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை

கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக "Expression of Interest" மூலம் விளம்பரம் செய்யலாம், மேலும், மேற்படி பணிகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி பொருள் குறித்து பணியினை மேற்கொள்ள தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர கட்டணத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2283/இ1/2018)

23. ஆரணி நகராட்சியில் 25.08.2018 அன்று வருவாய் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை ஆகியோர் திடக்கழிவு மேலாண்மை பிளாஸ்டிக் கழிவுகள் ஒழிப்பு பேரணி துவக்கி வைக்க வந்த சமயத்தில் ஆரணி நகராட்சி பிரதான சாலையில் அமைந்துள்ள சூரியகுளத்தினை பார்வயிடப்பட்டது. அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடி அறிவுரையில் சூரியகுளத்தின் சுற்றுப்புறத்தில் உள்ள செடி கொடிகளை அகற்றவும் சூரிய குளத்தில் உள்ள கழிவுகளை முழுவதுமாக அகற்றி சுத்தம் செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மேற்கூறிய பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி பணிகளை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று துறை மூலமாக (திரு. நா. தேவநாதன் உதவி பொறியாளர்) மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

24. ஆரணி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017 - 2018 ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 08.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம்<br><br>திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி பகுதியில் நவீன உடற்பயிற்சி கூட கட்டிடம் அமைத்தல், | 37.00 | S. ஆறுமுகம்<br><br>S. உஷாராணி | 0.10 %குறைவு<br><br>4.15 %.அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம், பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 939 /2017 /இ1)

25. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **29.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br><br>வருவாய் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி நவீன எரிவாயு தகன மேடையின் உபகரணங்கள் பழுது சரி செய்தல் | 5.00 | எஸ்.உஷாராணி<br>இ.இளங்கோவன் | 0,05 % குறைவு<br>0,80 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். பணி உத்தரவு வழங்கவும் அனுமதியளிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.